

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, மயிலாப்பூரில் நேற்று (28.02.2026) இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு, பூசாரிகளின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித்தொகையை வழங்கினார். இம்மாநாட்டில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் தவத்திரு இராமனுஜ எம்பார் சுவாமிகள், மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, மயிலாப்பூரில் நேற்று (28.02.2026) இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு, கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.1,500/ வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்து, 6,000 பூசாரிகளுக்கு மாதாந்திர ஊக்கத்தொகை வழங்கிடும் அடையாளமாக 11 பூசாரிகளுக்கு அதற்கான காசோலைகளை வழங்கினார். இம்மாநாட்டில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் தவத்திரு இராமனுஜ எம்பார் சுவாமிகள், மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, மயிலாப்பூரில் நேற்று (28.02.2026) இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு, பூசாரிகளுக்கு இருசக்கர வாகனம் வாங்குதற்கான மானியம் தலா ரூ.12,000/க்கான காசோலையை வழங்கினார். இம்மாநாட்டில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் தவத்திரு இராமனுஜ எம்பார் சுவாமிகள், மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, மயிலாப்பூரில் நேற்று (28.02.2026) நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு, இந்து சமய அறநிலையத் துறையின் சாதனைகளை விளக்கி வைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டார். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கிராமக் கோயில் பூசாரிகள் மாநாடு!

# பூசாரிகளுக்கு ஊக்கத் தொகை - பூசை உபகரணங்கள் - இருசக்கர வாகனம் வாங்கிட காசோலைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 1-**

**இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில், கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதாந்திர ஊக்கத்தொகை, பூசை உபகரணங்கள் மற்றும் இருசக்கர வாகனம் வாங்கிட மானியத்திற்கான காசோலைகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, மயிலாப்பூரில் நேற்று (28.02.2026) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு, கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.1,500/வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்து, 6,000 பூசாரிகளுக்கு மாதாந்திர ஊக்கத்தொகை வழங்கிடும் அடையாளமாக 11 பூசாரிகளுக்கு அதற்கான காசோலைகளையும், 10 பூசாரிகளுக்கு பூசை உபகரணங்களையும், 2 பூசாரிகளுக்கு இருசக்கர வாகனம் வாங்குதற்கான மானியம் தலா ரூ.12,000/க்கான காசோலையையும், 3 பூசாரிகளின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் ஒரு பூசாரியின் வாரிசுதாரருக்கு குடும்ப நலநிதி ரூ.50,000/க்கான காசோலைகளையும் வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை, தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், அர்ச்சகர் மற்றும் பணியாளர்களின் நலன் காக்கும் திட்டங்களை செயல்படுத்தி வருவதோடு, நிர்வாகக் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதி திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதியுதிவி, கிராமக்கோயில் பூசாரிகளின் நலன் காக்கும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதி திருக்கோயில்களின் திருப்பணி நிதியுதிவி எண்ணிக்கை ஆண்டிற்கு 1,250 ஆக உயர்த்தப் பட்டதோடு, நிதியுதவி ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டு, இதுவரை 5,000 திருக்கோயில்களுக்கு ரூ.106.25 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், கிராமக் கோயில் பூசாரி களுக்கான ஓய்வூதியம் ரூ.4,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2025 - 2026 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், “பூசாரிகள் நலவாரியத்தில், உறுப்பினராக பதிவு செய்திட ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000 லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும். தற்பொழுது உள்ள நலவாரிய உறுப்பினர்களுடன் புதிய உறுப்பினர் சேர்க்கைக்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்டு சிறப்பு முகாம் நடத்தி பதிவு சேர்க்கை நிறைவடைந்தவுடன், ஒரு கால பூசைத் திட்ட திருக்கோயில் அர்ச்சர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகைக்கு நிகரான ஊக்கத்தொகை பூசாரி நலவாரிய உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும்” என்றும், “ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்துள்ள கிராமக்கோயில் பூசாரிகள், ஆதிதிராவிடர் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் 10,000 நபர்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க தலா ரூ.12,000/ மானியமாக வழங்கப்படும். இதற்கான செலவினம் ரூ.12 கோடி அரசு நிதி உதவி வழங்கப்படும்” என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புகளை நிறைவேற்றிடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, மயிலாப்பூரில் நேற்று நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு, கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.1,500/வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்து, 6,000 பூசாரிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கிடும் அடையாளமாக 11 பூசாரிகளுக்கு அதற்கான காசோலைகளை வழங்கினார். மேலும், 10 பூசாரிகளுக்கு பூசை உபகரணங்களையும், 2 பூசாரிகளுக்கு இருசக்கர வாகனம் வாங்கு தற்கான மானியம் தலா ரூ.12,000/க் கான காசோலையையும், 3 பூசாரிகளின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் ஒரு பூசாரியின் வாரிசுதாரருக்கு குடும்ப நலநிதிரூ. 50,000/ க்கான காசோலைகளையும் வழங்கினார்.

இம்மாநாட்டில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞானபாலய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் தவத்திரு இராமனுஜ எம்பார் சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. த. வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் முனைவர் துரை. இரவிச்சந்திரன், திருமதி மா. கவிதா, இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் ராம சுப்பிரமணியன், கிராமக் கோயில் பூசாரிகள் பேரவை அறங்காவலர் ஆர்.ஆர். கோபால்ஜி, கிராமக்கோயில் பூசாரிகள் சங்கத் தலைவர் வாசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் பிறந்தநாள் வாழ்த்து....!

பொது வாழ்வு தளத்தில்.... பெரும் புதையல் ஆக வந்தவர் நமது முதல்வர். அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து சொல்லி மகிழ்ந்திடுவோம்! பேரறிஞர் அண்ணா 1967 ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடித்த போது... உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன என்று கேட்கப் பட்டது. அவர்.. வாய்... மை. என்று பதிலளித்தார். கழகத்தினர் பேசிப் பேசி... எழுதி எழுதி தான் ஆட்சியைப் பிடித்தனர். அதனால் தான் வாயும் மையும் என்ற அர்த்தத்தில் வாய்மை என பேரறிஞர் அண்ணா பதிலளித்தார்...

இரும்பு போன்ற நரம்புகளும்.. புத்திசாலித்தனமான மூளையும் இருந்தால் இந்த உலகம் முழுவதும் உனது காலடியில் கிடக்கும்.... என்று சொன்னவர் விவேகானந்தர். பெரியார்.. அண்ணா இருவருமே விவேகானந்தரின் வாசகத்தை உண்மை என நிரூபித்த உதாரண புருஷர்கள். தலைவர் கலைஞரின் பாதை வேறு! அவர் நெஞ்சுக்கு நீதியை எழுதினார்... நீதி கேட்டு நெடும் பயணமும் போனார். பராசக்தியில் பழகு தமிழை அழகு தமிழால் மாற்றினார். திருக்குறளையும் தொல்காப்பியத்தையும் இலகு தமிழில் மாற்றி எல்லோரையும் படிக்க வைத்தார். இவர் வீரம் சொட்ட பேசுவார்.. ஈரம் தொட்ட உழைப்பார். தோல்விகள் ஏற்பட்டாலும் மீண்டும் மீண்டும் விடாமுயற்சியின் மூலம் வெற்றிக் கனி பறிப்பார். அதிசயங்கள் நிகழ்வதுண்டு.. ஆனால் நிழல்கள் எங்கேயாவது நிஜங்கள் ஆவது உண்டோ? ஆனது. அதற்கு நமது முதல்வரே உதாரணம். கலைஞரின் நிழலாக இவரை பல காலம் பார்த்த மகிழ்ந்தோம். ஆனால் இன்று? காற்றிலே கவிதை எழுதும் கற்பனை கவிஞர் அல்ல இவர். இவரிடம் உபதேசமும் கிடையாது..



உதாசீனமும் கிடையாது! சாதனைகள் இவரை சரணடைகின்றன. வேதனைகள் இவர் பக்கம் திரும்பாமல் ஓடி ஒளிகின்றன. இவர் ஒரு நூதனம். நுணுக்கம் இவரது மூலதனம். கழகத்தின் அஸ்தமனம் ஆரம்பம் என கணக்காயர்கள் கணித்த போது.. அரவம் இன்றி அமைதியாய் மக்களை சந்தித்து... அவர்கள் இதயங்களில் சுவாசக் காற்றாய் குடியேறிவிட்ட இளைஞர் அணியின் இயக்கம் நமது முதல்வர். தன் தொடர் வெற்றிகள் மூலம் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தவர் நமது முதல்வர். இவரின் வெற்றியின் ரகசியம் என்ன? தோல்வி இவரை நெருங்க அஞ்சுவது ஏன்?...

a trained mind acts as your friend. the undisciplined mind acts as our enemy. இதனை நன்கு உணர்ந்தவர் நமது முதல்வர். அதனால் தன் எண்ணங்களை சிந்தனைகளை செயலாற்றலை தூய்மைப்படுத்தினார். ஒரு கட்டத்தில் அவர்.... நாம் தவறே செய்யவில்லை என்று சொல்ல மாட்டேன்... என் காலத்தில் அவற்றை மாற்றிக் காட்டுவேன்.... என தன்னிலை விளக்கம் தந்தவர் அவர். மக்களிடம் சென்றார்... வீதி வீதியாக.. வீடு வீடாக.. திண்ணைகளில் அமர்ந்து அனைவரிடமும் பேசினார். அனுபவங்களை ஆதங்கங்களை தேவைகளை நேரடியாக மக்களிடமே கேட்டறிந்தார். அதனால் தான் அவரால்... மக்களைப் பார்த்து.. உங்கள் கனவுகளை எங்களிடம் சொல்லுங்கள். அவற்றையெல்லாம் நாங்கள் நிறைவேற்றி தருகிறோம்... என்று சொல்ல முடிந்தது. சொன்னவற்றை செய்யவும் முடிந்தது..

சேதாரம் இல்லாமல் நகை செய்ய முடியாது.. தியாகங்கள் செய்யாமல் பகை வெல்ல முடியாது. இந்த வாசகம் தான் அவரது வாழ்க்கையானது. அவர் திட்டங்களை தீட்டினார். அவற்றை செயலாக்கினார். அதனால் பயனடைந்த பயனாளிகளை மக்களிடம் பேச வைத்து பார்த்து மகிழ்ந்தார். அடுத்த தேர்தல் அல்ல அவரது குறிக்கோள். அடுத்த தலைமுறையின் வளர்ச்சிக்கு வித்திடுவதே அவரது லட்சியம். இவரது ஆட்சியில் தமிழ்நாடு பல துறைகளில் முதலிடம் வகிக்கிறது! இத்தோடு விட்டு விட்டால் அடுத்த தலைமுறை ஏறுமுகம் காண்பது கடினம். அதற்கு தடையாக இருப்பது ஜனநாயக விரோத ஒன்றிய அரசு. அங்கே சிஸ்டம் சரியில்லை. அதனை மாற்றவே ஸ்டாலின் அரசு... திராவிட மாடல்.. என்ற அரசியல் தத்துவத்தை கையில் எடுத்துள்ளது. அதன் வெற்றிதான் இந்தியாவுக்கான புதிய விடியல்... அதுவே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் லட்சியப் பாதை... மக்களுக்காக ஆன பார்வையும் கூட!

**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குனர்



# ஆசிரியர்கள், மாற்றுத்திறனாளிகள் மீது அக்கறைகாட்டும் முதல்வருக்கு நன்றி!

### தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் அறிக்கை!

புதுக்கோட்டை, மார்ச் 1 –

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:–

ஆசிரியர் அரசு ஊழியர்களின் பாதுகாவலராக விளங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஊனமுற்றவர்கள் என்ற பெயரை மாற்றுத் திறனாளிகள் என மாற்றிக் காட்டியவர். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு சலுகைகளை அளித்திருக்கிறார். குறிப்பாக அரசு ஊழியர்களுக்கு ஆசிரியர்களுக்கு தகுதித் தேர்வில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பல லட்சக்கணக்கான ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் கனவுகளோடு காத்திருக்கும் தேர்வர்களுக்கும் பலனளிக்கும் வகையில் இனிவரும் ஆசிரியர் தகுதித் தேர்வுகளில் தகுதி மதிப்பெண்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினருக்கு 55 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவும்,

பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய பிரிவினருக்கு 55 சதவீதத்திலிருந்து, 50 சதவீதமாகவும் மாற்றி அரசாணை வெளியிடப் பட்டது.



இதன் மூலம் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நம் முதலமைச்சர் என்றுமே உறுதுணையாக இருப்பார் என்பதையும், பணியில் இருக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் பாதுகாப்பார் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

ஆசிரியர் தகுதித் தேர்வு தேவையில்லை என்பது தான் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் நிலைப்பாடு.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கிற பாதிப்புகளை போக்கும் வகையில் தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கு தகுதி தேர்வு தேர்ச்சி மதிப்பெண்ணில் 40% ஆக குறைத்து இருப்பதற்கும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரிய மன்றத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.